# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 57/2022
## வழக்கு சாட்சி PW–10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனீஸ்வரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துக்காமாட்சி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆத்தூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 19th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை பெருநகர் இராயப்பேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். தற்சமயம் மருத்துவ விடுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 30.05.2015 அன்று நான் செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கூடுதல் பொறுப்பாக தென்காசி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் திருமதி.காளிஸ்வரி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்றஎண்.254/2015 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 30.05.2015 ம் தேதி, காலை 10.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மணிகண்டன் மற்றும் செந்தில்குமரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர், 11.30 மணிக்கு

காவல்நிலையத்தில் இருந்த எதிரி மூக்காண்டி என்பவரை சாட்சிகள் சண்முகநாதன், செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க குற்றத்தை ஒப்புக்கொண்டு, தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி சட்டைப்பையில் மறைத்து வைத்திருந்த ஒரு சிறிய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் சண்முகநாதன், செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் 11.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆகும். சிறிய கத்தி **அ.சா.பொ.1** ஆகும். மேலும் சாட்சிகள் குருசாமி, தலைமைக்காவலர் பாலகன், காவலர் சக்கீர், மணிகண்டன், செந்தில்குமார், சண்முகநாதன், செந்தில்குமார் த/பெ.பிச்சையா, திருமதி. காளிஸ்வரி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட கத்தியை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.10** ஆகும். அத்துடன் எனது முதல் விசாரணையை முடித்து தென்காசி காவல் ஆய்வாளர் பணிப்பொறுப்பு ஏற்றுக்கொண்டதினால், அவர்களிடம் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்ட நபருக்கு வெளிப்படையான காயம் இல்லை என்றால் சரிதான். சிறிய கத்தியின் நீள, அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி கத்தியை வைத்திருந்தால் சம்பவயிடத்தில் கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. காவலர் சக்கீருக்கு லேசான காயம் ஏற்பட்டதாக

முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே காயம் ஏற்பட்டிருந்தால் முதல்தகவல்அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எதிரி அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காவலர் சக்கீரை கொலை செய்ய முயற்சித்ததாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

காவலர் சக்கீரின் வாக்குமூலத்தை எங்கு வைத்து பதிவு செய்தேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து பதிவு செய்தேன். காவலர் சக்கீர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காவலர் சக்கீரின் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் வைத்து பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 09.45 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. வரிசை எண்.15ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 30.05.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது, நேரம் குறிப்படப்படவில்லை. எத்தனை மணிக்கு எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன் என்றால் 13.30 மணிக்கு அனுப்பி வைத்தேன். முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு இரவு 07.45 மணிக்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

புள்ளிவிபரக்கணக்கிற்காக வேண்டி எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டு, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சி கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Harish, Assistant Programmer, முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:01:19 +0530